# வணிகவரித் துறை
# மக்கள் சாசனம்
# 2008 –2009

## நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள்

வணிகவரித் துறையின் கீழ்க்கண்ட நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை வெளிப்படுத்தும் நோக்கில் இந்த மக்கள் சாசனம் அமைகிறது:

- வணிகவரிச் சட்டங்கள் மற்றும் விதி–முறைகளின் கீழுள்ள வழிமுறைகளைச் செம்மையாகச் செயல்படுத்துதல்

- பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்த வரி வருவாய் வசூலை திறம்படச் செய்தல்

- வணிகம் மற்றும் தொழிற்சாலைகளிலுள்ள வணிகர்கள் மற்றும் வரி செலுத்து–வோருக்குத் தரமுள்ள தகுந்த நிர்வாகத்

தகவல் கட்டுப்பாட்டு முறையில் சேவை வழங்குதல்

**வழிவகைகள்**

மேற்கண்ட நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு இத்துறை கீழ்க்கண்ட வழிவகைகளை மேற்கொள்ள முயற்சிக்கும்:

- வெளிப்படையான பொறுப்புள்ள மற்றும் நம்பகத் தன்மையுள்ள நிருவாகம்
- தகவல்கள் அளிப்பதில் காலந்–தவறாமை மற்றும் மரியாதையுடன் செயல்படுதல்
- வரி தொடர்புள்ளவைகளைத் தீர்மானிப்பதில் நேர்மையுடனும் நீதி வழுவாமையுடனும் நடந்து கொள்ளல்

**எதிர்பார்ப்புகள்**

துறையின் சிறப்பான பணி மற்றும் நிருவாகம், வணிகர்களின் ஒத்துழைப்பைச்



சார்ந்துள்ளது. எனவே, கீழ்க்கண்டவற்றை வணிகர்களிடமிருந்து இத்துறை எதிர்பார்க்கிறது:–

- சட்ட விதிகளின்படி உரிய காலத்தில் வணிகங்களைப் பதிவு செய்தல்
- எளிமையான கொள்முதல் மற்றும் விற்பனைத் தொடர்பான கணக்கு–களைப் பேணுதல்
- விற்பனை விவரப் படிவங்களை குறித்த காலத்தில் தாக்கல் செய்தல்
- வரிகளைக் குறித்த காலத்தில் செலுத்துதல்
- சட்டங்களை முழுமையாகக் கடைபிடித்தல்
- வரிச் சலுகைகளை நுகர்வோருக்கு வழங்குதல்

**<u>மேற்குறிப்பிட்டுள்ள எதிர்பார்ப்புகளை அடைய பின்வரும் வழிமுறைகளை நடைமுறைப்படுத்த இத்துறை பெருமுயற்சி செய்யும்:-</u>**

- விண்ணப்பங்கள், வரி விதிப்பு விவர அறிக்கை மற்றும் அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும், அவை கிடைக்கப் பெற்ற உடன் அல்லது அதிகபட்சமாக ஏழு நாட்களுக்குள் ஒப்புகை அளித்தல்

- கடிதங்கள் கிடைக்கப் பெற்ற 30 வேலை நாட்களுக்குள் அவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுத்தல்

- தவிர்க்க முடியாத காரணங்களினால், முடிவு எடுப்பதில் தாமதம் ஏற்படின் இடைக்கால பதில் அளித்தல்

- திருப்பித் தர வேண்டிய தொகையை, ஏற்கத் தக்க கோரிக்கை கிடைக்கப் பெற்ற 90 நாட்களுக்குள் வழங்குதல்



- நிறுத்தி வைக்கப்பட்ட சரக்குகளை, அதற்குரிய கோரிக்கைகள், சரியாக மற்றும் முழுமையாக கிடைக்கப் பெறின், உடனடியாக விடுவித்தல்

- வரி செலுத்தியதற்கானச் சான்றுடன் தாக்கல் செய்யப்படும் கணக்கு அறிக்கைகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை உடனே ஏற்றுக் கொள்ளுதல்

- வணிகவரி ஆணையர் அவர்கள் மொத்த வரிவிதிப்பு இனங்களில் 20 விழுக்காட்டிற்கு மிகாமல் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தேர்வு செய்து அதற்கான செயல்முறைகளை வழங்கும் இனங்களில் மட்டும் முழு அளவில் கணக்குகளைத் தணிக்கை செய்தல்; பிற இனங்களில் வணிகர்கள் தாக்கல் செய்துள்ள கணக்கு அறிக்கைகளின் அடிப்படையில் சுய வரிவிதிப்பு செய்தல்

**<u>இத்துறை, மேலும் கீழ்க்கண்டவற்றை உறுதி செய்ய முயற்சிக்கும்:-</u>**

- வணிகர்களுடன் தொடர்புடைய அனைத்து அலுவலர்களும் அடையாள அட்டை வைத்திருப்பார்கள்.

- பெறப்படும் தனிப்பட்ட மற்றும் வணிகம் தொடர்பான தகவல்கள் ரகசியமாகப் பேணப்படும்.

- சரக்கு அனுப்புபவரின் சரியான பட்டியல் அல்லது ஆவணங்கள் உள்ளபோது அடிக்கடி தணிக்கை செய்தலைத் தவிர்த்து சரக்குகள் தடையில்லாமல் செல்லுதல்.

- சரக்குகளை நிறுத்தி வைக்க நேரிடின், அதற்குரிய காரணங்களை விளக்கிய பின்னரே, அந்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் (சரக்குகளை நிறுத்தி வைப்பதற்கு முன்னர் தேவையான வாய்ப்பு அளிக்கப்படும்).



- சந்தேகப்படும் இனங்களில் மட்டும் முறையாகப் புலனாய்வு செய்து அதன் அடிப்படையில் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர்களின் அனுமதி பெற்ற பின்னரே வியாபாரத் தலங்கள் தணிக்கைச் செய்யப்படும்.

- மேல்முறையீடு பற்றிய வழிமுறைகள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் பற்றிய விவரங்கள் கேட்போருக்கு அவை குறித்த முழுத் தகவல்களும் வழங்கப்படும்.

- வரிவிதிப்புக் கொள்கை மற்றும் வழிமுறைகள் குறித்து ஆய்வு செய்யும்பொழுது, வணிகம் மற்றும் தொழிற் சங்கங்கள் மற்றும் நுகர்வோர் சங்கங்களுடன் கலந்து ஆலோசிக்கப்படும்.

- தேவையான தகவல்கள் மற்றும் வழிமுறை பற்றிய விவரங்களை சென்னை சேப்பாக்கம், வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் உள்ள இணை ஆணையர் (பொது மக்கள் தொடர்பு) அவர்களை அணுகிப் பெறலாம். (தொலையச்சு (Fax) மற்றும் தொலைபேசி எண் 044 28548097).

- சட்டம் மற்றும் வழிமுறைகள் குறித்த அனைத்து மாற்றங்களும் அவ்வப்போது விளம்பரப்படுத்தப்படும்.

**தரமான சேவை வழங்குவதை நோக்கி**

- **1.1.2007** முதல் தமிழ்நாட்டில் மதிப்புக் கூட்டு வரி முறை அமலாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் இருந்த **3,89,986** பதிவு பெற்ற வணிகர்களுக்கு வரி செலுத்துவோர் அடையாள எண் வழங்கப்பட்டுள்ளது. வணிகர்களிடமிருந்து பெற்ற மனுக்களின் அடிப்படையில் தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், **2006**–ன் கீழ் பதிவுச் சான்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

- தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் வியாபாரத்தை நிறுத்தும் வரை செல்லத்தக்கதாகும். பதிவுச் சான்றிதழைப் புதுப்பிக்கத் தேவையில்லை.



- மனு செய்த **30** நாட்களுக்குள் பதிவுச் சான்றிதழ் பெற வணிகர்களுக்கு உரிமை உண்டு. www.tnvat.gov.in என்ற வலை தளத்தின் மூலமாகவும் வணிகர்கள் பதிவு செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது.

- ஜனவரி **2008** முதல், மாநிலத்திலுள்ள முதல் **6,000** வணிகர்கள் கணினி மின் அனுப்புகை வாயிலாக, மதிப்புக் கூட்டுவரி மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், மாதாந்திர அறிக்கைகளைத் தாக்கல் செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது. இவ்வசதி, ஏப்ரல் **2008** முதல் மேலும் **20,000** வணிகர்களுக்கு நீட்டிக்கப்–பட்டுள்ளது.

- வணிகவரித்துறை சார்ந்தப் பொது விவரங்கள் www.tnsalestax.com என்ற வலைதளத்தின் மூலமாகக் கிடைக்கும்.

- தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழான பதிவு எண்களுக்குப் பதிலாக வழங்கப்பட்ட மதிப்புக் கூட்டு வரி பதிவு எண், மதிப்புக் கூட்டு வரிச் சட்ட வழிவகைகள், விதிமுறைகள்,

- சுற்றறிக்கைகள், மாதாந்திர அறிக்கைகள் தாக்கல் செய்வது தொடர்பான நடைமுறைகள் போன்றவையும் மற்றும் பிற விவரங்களும் www.tnvat.gov.in என்ற வலைதளத்தில் உள்ளன.

- மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956–ன் கீழ் பிற மாநிலங்களில் உள்ள வணிகர்களின் நிலை மற்றும் அவர்களுக்கு அச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மற்றும் அவர்களால் பயன்படுத்தப்பட்டப் படிவங்கள் குறித்து தெரிந்துகொள்ள வரித் தகவல் பரிமாற்றத் திட்டம் (TINXSYS) உருவாக்கப்–பட்டுள்ளது. TINXSYS வலை தளங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

    1. http://www.statevat.gov.in
    2. http://www.tinxsys.com
    3. http://www.vinxsys.com

- மேலும், வணிகர் குறித்த விவரங்களை (வரி செலுத்துவோர் அடையாள எண்ணைப் பயன்படுத்தி) "தகவல் பரிமாற்றக் குரல் பதிவு செய்யும் கருவி" மூலமாக அறிந்து கொள்ளலாம்.



இதற்கான கட்டணமற்ற தொலைபேசி எண் 1800 2200 17.

- மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் வரிவிகிதம் அல்லது தெளிவுரை கோரப்படும் இனங்களில் வணிகவரி ஆணையர் அவர்கள் கூடியவரை விரைவில் விளக்கமளிப்பார். தவிர்க்க முடியாத காரணங்களினால், தெளிவுரை வழங்குவதில் காலதாமதம் ஏற்படின், வணிகவரி ஆணையர் இடைக்கால பதில் ஒன்றை அனுப்புவார்.

- புகார்கள் மற்றும் குறைகள் குறித்து வணிகர்களும், பொது மக்களும், சென்னை, சேப்பாக்கம், வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் உள்ள கூடுதல் ஆணையர் (நிர்வாகம்) அவர்களின் தலைமையில் இயங்கும் குறைதீர்க்கும் பிரிவிற்கு மனு செய்யலாம்.

- மேலும், புகார்கள், குறைகள், வரி ஏய்ப்பு பற்றிய விவரம் மற்றும் பொதுமக்களின் ஆலோசனை ஆகியவற்றை நேரடியாக வணிகவரி ஆணையரிடம் தெரிவிக்க

ஏதுவாக "தகவல் பரிமாற்றக் குரல் பதிவு செய்யும் கருவி" வணிகவரி ஆணையர் அவர்கள் அறையில் பொருத்தப்பட்டுள்ளது. இதற்கான நேரடி தொலைபேசி இணைப்பு எண் 044–28520535 ஆகும்.

- தகவல் அறியும் உரிமைச் சட்டம் இத்துறையில் அமலாக்கப்பட்டு அதனுடைய அமலாக்கம் துறையில் உயர்மட்ட அளவில் கண்காணிக்கப்படுகிறது.

- வணிகர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கு மருத்துவம், கல்வி போன்றவற்றிற்கு நிதி உதவி வழங்கும் நோக்கத்துடன் வணிகர் நல வாரியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**<u>வணிகர் நலம் பேணுதல்</u>**

- வணிகர்கள் மற்றும் அவர்தம் குடும்பங்கள் நலம் காக்கும் பொருட்டு வணிகர் நல வாரியம் மூலமாக பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.



- வணிகர் நல வாரியம் மூலமாக 31.3.2008 முடிய செயல்படுத்தப்பட்ட நலத்திட்ட உதவிகள் பின்வருமாறு :-

| வ. எண். | நலத்திட்டம் | உதவி பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட உதவித் தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | குடும்ப நல உதவி | 291 | 72.95 |
| 2 | மருத்துவ உதவி | 37 | 8.26 |
| 3 | கல்வி உதவி | 83 | 2.18 |
| 4 | தீ விபத்து உதவி | 29 | 1.45 |
| 5 | விளையாட்டு உதவி | 2 | 0.15 |
| 6 | உயர்கல்வி உதவி | 6 | 0.20 |
| 7 | உடல் ஊனமுற்றோர் உதவி | 2 | 0.15 |
| 8 | திருமண உதவி | 2 | 0.10 |
| | மொத்தம் | 452 | 85.44 |

- இந்த வாரியத்தின் உறுப்பினராகும் தகுதி எல்லா பதிவு பெற்ற வணிகர்களுக்கும் உண்டு. இதற்கு ஒவ்வொரு உறுப்பினரும் ஆயுட்காலச் சந்தாத் தொகையாக ரூ.250/– செலுத்தவேண்டும். 31.3.2008 முடிய 45,210 உறுப்பினர்கள் மூலம் ரூ. 1.13 கோடி பதிவுக் கட்டணமாகப் பெறப்பட்டுள்ளது. இவ்வாரிய உறுப்பினர்களுக்கு உறுப்பினர் சான்றிதழ்கள் மற்றும் அடையாள அட்டைகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இதுவரை 3,555 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

- வணிகர் நலம் பேணுவதற்காக வணிகர் நல வாரியத்தில் உள்ள குறைகள் களையப்பட்டு நலத்திட்ட உதவிகளை மேம்படுத்துதற்குரிய வழிவகைகள் அவ்வப்போது மறு ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.



## முடிவுரை

இத்துறை, சட்ட விதிமுறைகளை ஏற்று செயல்படும் வணிகர்களை கண்டறிந்து அவர்களை ஊக்குவித்தும், சட்ட விதிமுறைகளை ஏற்று செயல்படாதவர்கள் மீது, துறையின் திறமையான செயலாக்கம் மற்றும் தணிக்கை முறைகளைப் பயன்படுத்தி வரித் தவிர்ப்பை நீக்கக் கடுமையான நடவடிக்கை எடுக்கும். இத்துறையும், வணிகர்களும் ஒருவருக்கொருவர் நம்பகத்தன்மையுடனும், மதிப்புடனும் இணைந்து செயல்படுவதன் மூலம், மாநிலத்தின் வளர்ச்சியில் சிறப்பாக பங்கேற்க இயலும் என நம்பப்படுகிறது. எப்போதும் மக்களுடன் நட்புணர்வோடு செயல்படும் என்று இத்துறை உறுதியளிக்கிறது.

**சி.நா.மீ. உபயதுல்லா**
வணிகவரித்துறை அமைச்சர்